தத்துவபோதினி.

பு. ௨.] சென்னைப்பட்டணம் ௧௮௬௫ஹு செப்டெம்பர்மீ ௨௭. [இல. ௫.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம, ஶாந்திஶ்ஶிவமத்வைதம், தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோதேவஸ்ய தீமஹி, தியோயோந: ப்ரசோதயாத்.
ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
௧. கடவுள்துதி............	௧௦௫—௧௨௦	௬. பகவத்கீதை............	௧௧௨
௨. விளம்பரங்கள்............	௧௦௬	௭. உபநிஷத்து............	௧௧௫
௩. தத்துவபோதினி............	௧௦௭	௮. மநுநூல்............	௧௧௫
௪. விவாகம்............	௧௦௮	௯. நிருபங்கள்............	௧௧௭
௫. ருக்குவேதசம்ஹிதை............	௧௦௯	௧௦. சந்தாதாரர்அட்டவணை............	௧௨௦

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

அடாணாராகம்-அடதாளம் சாப்பு.

பல்லவி.

உன்றனருளினையே - பிரமனே - என்றும்நான்நம்புகின்றேன்.

அனுபல்லவி.

உன்றனருள்பெறில் - வேண்டுவதொன்றில்லை
உன்றனருள்விடில் - ஆவதுமொன்றில்லை.........(உன்.)

சரணங்கள்.

௧. ஆதிதெய்வமும்நீயே - உலகத்திற்க
நாதிதெய்வமும்நீயே,

மேதினியிலெப்போதும் - என்றனுக்கு
நீதியறிவானந்தமாய்.
சோதிபிரமனேகீ - போதித்துநித்தியவி
பூதியளிக்காவிடில் - பிதிக்கேயாளாவேன்........(உன்.)

உ. உத்தமபேறும்நீயே - பக்தர்க்க
னுத்தமபேறும்நீயே.
நித்தரக்ஷகனும்நீயே - யவர்கட்க
நித்தசத்துருவும்நீயே.
சுத்தமிகுமுன்றன் - முத்திபதந்தனே.
பித்தனுமென்றனுர்க்கு - சித்திக்கச்செய்தருள் ... (உன்.)

ந. கோரசிக்ஷகன்நீயே - பாவிகட்க
கோரசிக்ஷகனும்நீயே.
சூரவரசனும்நீயே - யவர்கட்குத்
தூரபதவியும்நீயே.
சோரனுமென்றனை - த்தீரனுகச்செய்து
பூரணமாமுன்றன் - சீரடிதந்தருள்...... ...... (உன்.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியைய வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் ஏஜண்டாகிய-கா. தெய்வசிகாமணி முதலியார் அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்......................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.........................க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதார்க்காக,ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணு வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்க

ளும், பங்குக்காரர்களும், இடம் மாறும்
போது அந்தவிவரத்தைத் தயைசெய்து
ஏஜண்டுக்குத் தெரிவிக்க வேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இய
ற்றப்பட்டபாலவியாகரணம் 0 - ச - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்
ணப்பம் விக்கிரஹ ஆராதன
த்தைக்குறித்தது, நன்றாய்ப
யிண்டுசெய்தது............ 0 - அ - 0

ஷை மட்ட பயிண்டுள்ளது ... 0 - எ - 0

கஅஙசஹு மேமாசம் முதல்
கஅகூடுஹு எப்பிரல்மீ வ
ரையிலுள்ள தத்துவபோதி
னி பயிண்டுசெய்தது... ...கூ - 0 - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்
கு ஒரு அணாவீதம் தபால்கூலி சேர்த்
தனுப்பவேண்டியது.

நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தபத்திரிகையில் பிரசுரமாகும்ப
டி தயைசெய்து நிருபமெழுதியனுப்பு
ம் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்
டியதற்கு முன்மாதம் - உ0உக்குள்ளாக
அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி
அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாக
விருக்கும்.

எங்கள் கொள்கைகளை ஆக்ஷேபித்தெ
ழுதினால் நாங்கள் பிரசுரம் செய்யமாட்
டோமென்கிற கருத்திலே, நிருபமெழுத
மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய்
நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை
வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தா
கையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்
தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில்
பிரசுரம் செய்வது மாத்திரமேயன்றி, ப
ழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்க
ளுக்கு எங்களாலியக்கவரையில் சமாதா
னம் சொல்லவும், சரியான ஆக்ஷேபங்க
ளை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கி
றோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷ
ங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலு
ம் எங்களுக்குச் சம்மதமேயாகிலும் வி
யக்தி தூஷணங்களை யடங்கிய நிருபங்க
ளை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகை
யால் அதற்காக மன்னிக்கக் கோருகிறோ
ம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்
மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகி
றவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தை
யுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவா
ர்களென்று நம்புகிறோம்.

தத்துவபோதினி.

சோதரர்களே! ஆதிமாதத்தியபத்
திரிகையில் நாங்கள் ஸம்ஸ்கிருதபாஷை
யைத்தூஷித்ததாகப் பலரபிப்பிராயப்பட்
டிருக்கிறார்களென்று நம்மன்பரிற்சிலரால்
அறிந்தோம். அதைத்தூஷிக்கவேண்டுமெ
ன்பதும் எங்கள் கருத்தன்று ; அதனுடைய
ய மஹிமையையும் நாங்களறியாமற்போக
வில்லை. ஆகிலும்உலகத்தில் மனிதரால்ப
டைக்கப்பட்ட பொருள்களில் அடியோ
டு பழுதற்றன ஒன்றுமிருக்கமாட்டாதெ
ன்பது லோகப்பிரசித்தம். படைத்தபோ
தே குறையற்றதாயிராவிடினும் பின்னே
ர் அதிலுள்ள குணதோஷங்களைப் பற்
றவிசாரித்துக் குணங்களைக் கிரகித்து
தோஷங்களைவரைந்து குறைவுகளைப்பரி
பூர்த்திசெய்து கொண்டுவருவோமாகில்
சர்வோத்கர்ஷத்துக்கு அதிகாரிப்பியத்
தை யடைவோமல்லவா. தோஷமிராப்
பதாயே கிரகிக்காவிடில் அதைச்சீர்திரு
த்துவதெப்படி? பாஷைகளின் சுபாவ
த்தைச் சற்றுயோசிக்கப் புகுவோமாகில்
அதைபொருங்கச்சீர்திருத்த முடியாதெ
ன்று விளங்கும். இதற்கு நமது தேகாச்
மத்தை திருஷ்டாந்தமாகக்கொண்டு யோ
சிப்போம். ஒருசாணுடல் கொண்டபிறந்
த நாமனைவரும் உண்டுகுடிக்கும் பண்ட
ங்களிலுள்ள மூலபதார்த்தங்களை நமது
ள் கடவுளாலமைக்கப்பட்டிருக்கிற யந்தி
ரங்கள் வெவ்வேறாகப்பிரித்து எலும்பிற்
குவேண்டிய சாமக்கிரிகளை யெலும்புட
னும், ரத்தத்துக்குவேண்டியவற்றை ரத்த
த்துடனும், மாம்சத்திற்கு வேண்டிய வ
ற்றை மாம்சத்துடனும், இன்னும் பற்

பல உறுப்புக்களுக்கு வேண்டுமவற்றை முறையே அவற்றுடனும் சேர்த்து மீதியைவெளியிற்போக்கவே நாம் ஆறடிஉயரமும் அதற்கிசைந்த பருமனுமாய் வளர்வதுமன்றி, நமக்குள்ளிருக்கும் பண்டங்கள் கெடுந்தோறும், அவைமயிர்க்கால்களால் கழிந்து வெளியில்வந்து விடுகிறதென்றும்; இவ்வாறு ஏககாலத்தில் நம்ம அவயவங்களுக்கு விருத்திக்ஷயங்களிராவிடில், நமக்குக்ஷேமம் சித்திக்காதென்றும்; இந்தஹேதுவினால் ஏழுவருஷத்துக்கொருதரம்நம்மஉடல்கூற்றிலுள்ளபொருள்களெல்லாம் அடியோடுமாறி புதிதாய்விடுகிறதென்றும் இங்கிலீஷார் பயற்சியால்வெளியாயிருக்கிறதேஹதர்மசாஸ்திரத்தால்ஏற்படுகிறதல்லவா? இப்படிக்கன்றி உயிரளவும்வேண்டிய உணவினையொருங்க ஊட்டுவதினாலாவது, அல்லது இருபதுவயதாகி நமதுதேகம் வளரத்தக்கவரையில் வளர்ந்துவிட்டதென்கிற ஹேதுவினால் உணவளிக்காமலிருப்பதினாலாவது தேகம் விருத்தியாகவாவது நிலைக்கவாவது கூடுமோ? இவ்வாறேபுதியனபுகுதலும் பழயனகழிதலும் வியவஹாரத்திலுள்ள ஒவ்வொருபாஷைக்கும் இயல்பாம். ஸம்ஸ்கிருதமும் வியவஹாரபாஷையாயிருந்தவரையில், அதிலும்இப்படியே புகுதலும் கழிதலும் இருந்ததென்பதற்குப் பலதிருஷ்டாந்தங்களை யெடுத்துரைக்கக்கூடும். பலகாலங்களில் உண்டானபல கிரந்தங்களை யொன்றுடனொன்று ஒப்பிட்டுப்பார்ப்போமாகில் இவ்வுண்மை நன்றாய் விளங்கும். வேதங்களில் ஒருவித சப்தங்களும் பிரயோகங்களும் வழங்கிவந்தபோதிலும், பிறகுவியாகரணம் ஒருவாறு சீரடைந்தபிறகு உண்டான ஸ்மிருதிகளில் அவைபிரயோகிக்கப்படாமையும்; இந்தஸ்மிருதிகளிலுள்ள பிழைகளை மாகவிகள் அனுசரிக்காமையையும் சற்றவதானமாய்ப் பரிசோதிப்போமாகில் திருப்திகரமான சமாதானம் தானாய்வரும். ஒருபாஷையை உண்டாக்குவோர் அக்காலத்திலுள்ள தொழில்களையும் பொருள்களையும் விளக்கக்கூடிய சொற்களையுண்டாக்கியிருக்கக்கூடுமாகிலும் இனிவெகுகாலத்துக்குப் பிறகு புதிதாய் உண்டாகத்தக்க தொழில்களுக்கும் பொருள்களுக்கும் கூடசொற்களுண்டாக்கி யிருப்பார்களெனப் பொருந்துமோ? அந்தந்தகாலங்களில் தோன்றும் குறைவுகளை அப்போதுள்ளவர்களல்லவா பரிபூர்த்தி செய்துகொள்ளவேண்டும். முன் பத்திரிகையில் நாங்களுரைத்ததின் நோக்கமெல்லாம் கூடி இவ்வளவேயன்றி உண்மையாய் ஸம்ஸ்கிருதபாஷைக்குரிய மஹிமையைக் குறைக்கவேண்டுமென்பதாவது, இல்லாததோஷங்களை யதனிடத்தில்ஆரோபிக்கவேண்டுமென்பதாவது எங்கள் கருத்தென யாராவது கிரகித்திருந்தால் அதுபிசகென்று வினயமாய் எச்சரிக்கிறோம். ஆனால் அதிலுள்ளகுறைவுகளை யுரைத்தவாறே, அதின்மஹிமைகளையும் நாங்களேனுரைக்கவில்லை யென்றாலோ, அதற்குச்சமாதானம் தானாய்விளங்கத்தக்கது; சுவல்பமாயுள்ள குறைவுகளையெடுத்துக்காட்டுவது எளிதாகிலும், விஷயாந்தரங்களை விசாரிக்குங்கால் கேவலம் திருஷ்டாந்தமா யெடுத்துரைக்கப்பட்ட ஸம்ஸ்கிருதபாஷையின் சிறப்பைக்குறித்து சங்கிரகமாய்க்கூறி முடியுமோ. இதைக்குறித்துத் தனியாய் ஒருசஞ்சிகை யெழுதினாலொழியதிருப்திகரமாயிராதாகையால் விரைவில் அவ்வாறேசெய்ய நிச்சயித்திருக்கிறோம். அதுவரை யெங்கள்கருத்தை நம்மன்பர் பிசகாய்க் கிரகிக்காமலிருக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம்.

விவாகம்

கல்விமுடிந்தால் கல்லியாணம் கைக்கூடுமென்றெதிர்ப்பார்ப்போமல்லவா. முற்காலத்தில் இதின்உண்மை சுலபமாய்விளங்குமாகிலும் இக்காலத்தில்பெரும்பான்மையருக்கும் இதுபுதுமையாய்த் தோன்றுமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் பிரகிருதத்தில் நமதுநாட்டில் கல்விமுடியாமல் கல்லியாணம்கைக்கூடுவதும், கல்விமுடிந்தும் கலியாணம்சித்திக்காமற்போவதுமே ஆசாரமாக வழங்கிவருகின்றமையால் தொடக்கத்திலுரைத்த உண்மை மனதிற்பொருந்துவது கடினமே. க

ல்யாணம்என்பதற்கு விவாகம் மாத்திரமேயன்றி, மங்களமென்றும் சுபமென்றும் பொருளுண்டு. கசடறக்கற்றபிறகு சகலவிதசுபங்களும் சித்திக்குமென்பது அனைவர்க்கும் எளிதில்விளங்குமாகிலும் கல்விமுடியாவிடினும் கல்யாணம்சித்திப்பதெப்படியென்று சங்கிக்கலாம். ஆகிலும் நமதுநாட்டில் சிலகாலமாய்நடந்தேறிவரும் வழக்கங்களைக் கண்ணுறுவார்களாகில், முற்காலத்திலுள்ளவர் கல்யாணமென்னும் பொருளைத் தேடினார்களென்றும்; இக்காலத்திலோ அச்சொல்லைத் தேடுகிறார்களென்றும் விளங்கும். ஐந்துவயதானமேல் ஆசாரியன்வசமாகி, இரவென்றும் பகலென்றும், எண்ணமலைப்போதும், ஊக்கமாய்க் கற்கவே உறுதிமனம்பெற்றுப், பலவிதக் கலைகளைப் பழுதறக்கற்றபின், துர்க்குணங்களை யெலாம் துறந்து வெகுசிரான நற்குணங்களை யெலாம் நாடியதுமல்லாமல், தேசயாத்திரைகள்செய்து தெளிந்தஞானிகளாகி, நாட்டுக்குமீண்டமேல் நன்மைதீமைகளெலாம் நன்றாகவாராய்ந்து, நீதியிற்சிறந்தவரும், கலைமகள்போலவேகல்வியில்தேர்ந்தவரும், குற்றமில்லாத பலகுணங்களைப்பெற்றவரும், மனதிற்கிசைந்தவெகுமஹிமையையுற்றவரும், அிரனச்சீர்துக்கியடையும் மனைவிகளாலே, மனிதரடையக்கூடும் மஹிமையெல்லாமுற்று, கடவுளின் அருளினால் கீர்த்தியையும்பெற்று, செல்வத்தினால் விளையும் சிறெலாம் கைக்கொண்டு, பேரும் பிரதிஷ்டையும், பிள்ளை பெண்களும் பெற்று, தாங்களும் சுகமடைந்து, தங்களையண்டிய பெற்றோர்பிறந்தோர்க்கும் மற்றோர்க்கும் சுகமீந்து, தம்முயிர்போலவே மன்னுயிரையும்காத்து, துன்பத்தையறியாது இன்பத்தில் முழுகியே புண்ணியசாலிகளாகப் பூமியில் வாழ்வார்கள். இப்படிக்கன்றி பல்முளைத்துப் பேசக்கற்குமுன், மக்களின் புத்தியினுடையவாவது குணங்களுடையவாவது நோக்கம்விளங்குமுன், அவர்கள் தலையில் சுட்டிவைக்கும் சுமையின் சுவரூபம் விளங்குவதற்கே அவகாசமில்லாத காலத்தில், அவர்கட்கு பதிலாக அவர்களைப்பெற்றவர்கள் வக்கீல்களாய்நின்று கல்யாணமென்றுபெயரிட்டுச்செய்யும் மரப்பாச்சத்திருவிழாவினால் விளையும் அளவற்ற தீமைகளைக்குறித்து அனைவருமறிவார்களாகையால் பிரகிருதத்தில் இவ்விஷயத்தைத் தொட்டதற்கு நாங்கள் வேறதுவுரைக்க வேண்டிய ஆவசியகமில்லையென்று நம்புகிறோம். இவ்விஷயத்தின் கவுரவத்துக்கியைந்தவாறு இதைவிரித்து விசாரிக்கவேண்டுமாகையால் இன்று அதைச்சொல்லிமுடியாது. ஏனெனில் இதற்குச்சம்மந்தமாக நாங்கள்விசாரிக்கக் கருதியவிஷயங்களென்னவெனில், விவாகத்தின்சரித்திரம், விவாஹசுவரூபம், விவாகத்தின்வகைகள், விவாககாலம், விவாகத்துக்கு அதிகாரிகள், வதூவராளுடையலக்ஷணம், விவாகபரிபூர்த்திக் காவசியகங்கள், விவாகத்திற்கெடுத்தமுறைகள், விவாகத்தினால் விளையும் பயன்கள், விவாகச்சடங்குகள், விவாகபந்தத்திற்குரியஅவதி, புனர்விவாகம், முதலியபலவிஷயங்களாம். ஆகையால் இவற்றைக் கிரமமாகத் தொடர்ச்சியாய்வருகிற பத்திரிகைமுதல் விசாரிக்க நிச்சயித்திருக்கிறோம்.

ருக்குவேத சம்ஹிதை.

(தொடர்ச்சி.)

சூக்தம், ச. (மக.)

[இந்தசூக்தத்துக்கு ருஷிமதுச்சந்தஸினுடைய புத்திரனாகிய ஜேதாஎன்பவர், தேவதைஇந்திரன், பா அனுஷ்டுப்.]

வர்க்கம், உக.

க. இந்த்ரம்விஶ்வாஅவீவ்ருதந் ஸமு-
த்ரவ்யசஸம்கிர꞉, ரதீதமம்ரதீநாம்
வாஜாநாம் ஸத்பதிம்பதிம்.

(எங்கள்)ஸ்தோத்திரங்களெல்லாம், கடல்போல் வியாபித்திருக்கிறவரும் தேருடையவர் (களாகிய போர்வலர்)களில் முதன்மையான தேருடையவரும் அன்னத்திற்கு எசமானனும், நல்லோரைக்காப்பவருமாகிய இந்திரனைப் பெருமைப்படுத்துகின்றன.

௨. ஸக்யே த இந்த்ர வாஜிநோ மா பேம ஶவஸஸ்பதே, த்வாமபி ப்ர ணோநுமோ ஜேதாரமபராஜிதம்.

வலிமையைக் காக்கின்றவராகிய இந்திரனே உம்முடைய நேசத்தில் (நிற்கின்றநாங்கள்) அன்னமுடையவர்களாய் (சத்துருக்களை) அஞ்சாதிருக்கிறோம். செயிக்கிறவரும், செயிக்கப் படாதவருமாகிய உம்மை எங்கும் மிகப்புகழ்கிறோம்.

௩. பூர்வீரிந்த்ரஸ்ய ராதயோ ந விதஸ்யந்த்யூதய꞉, யதீ வாஜஸ்ய கோமத ஸ்தோத்ருப்யோ மம்ஹதே மகம்.

இந்திரனுடைய கொடைகள் பழமையானவைகள் (இப்போதும் யசமானனானவன்) புகழ்வோர் (களாகிய ருத்துவிக்கு)களுக்கு பசுக்கள் கூடிய அன்னத்துக்கு (ப்போதுமான) பொருளை கொடுப்பாராகில் (இந்திரனுடைய) ரக்ஷணங்கள் குறையா.

௪. புராம் பிந்துர்யுவா கவிரமிதௌஜா அஜாயத, இந்த்ரோ விஶ்வஸ்ய கர்மணோ தர்தா வஜ்ரீ புருஷ்டுத꞉.

இந்திரனானவர் (அசுரர்களின்) நகரங்களைத் தகர்க்கின்றவராயும் (அழியாத) இளமை பொருந்தியவராயும், மேதாவியாயும் அளவிறந்த வலிமையுடையவராயும் எல்லாக்கருமங்களையும் போஷிக்கிறவராயும் வச்சிரதாரியாயும், மிகவும் புகழப்படுபவராயும் பிறந்தார்.

௫. த்வம் வலஸ்ய கோமதோ(அ)பாவரத்ரிவோ பிலம், த்வாம் தேவா அபிப்யுஷஸ்துஜ்யமாநாஸ ஆவிஷு꞉.

வச்சிராயுத முடையவரே, நீர்பசுக்களுடையவனான வலனுடைய * குகையைச் சூழ்ந்துகொண்டீர். (அப்போது) மனத்துயரமடைந்த தேவர்கள் (உம்முடைய ரக்ஷணையால்) அச்சமற்றவர்களாய் உம்மையடைந்தார்கள்.

௬. தவாஹம் ஶூர ராதிபி꞉ ப்ரத்யாயம் ஸிந்துமாவதந், உபாதிஷ்டந்த கிர்வணோ விதுஷ்டே தஸ்ய காரவ꞉.

சூரனே, உம்முடைய கொடைகளினிமித்தம் (ஹோதாவாகிய) நான்சொரிகின்றதை*ச் சொல்லுகின்றவனாய்; மீண்டும்வந்தேன், ஸ்துதியால் பூசிக்கப்படுகின்றவரே, (ருத்துவிக்கு யசமானர்களாகிய கருமம்) செய்பவர்கள் (முன்உமக்குச், சமீபம் நின்றிருக்கிறார்கள். (ஆதலால்) அப்பேர்ப்பட்ட உம்முடைய (கொடையை) அறிகிறார்கள்.

௭. மாயாபிரிந்த்ர மாயிநம் த்வம் ஶுஷ்ணமவாதிர꞉, விதுஷ்டே தஸ்ய மேதிராஸ்தேஷாம் ஶ்ரவாம்ஸ்யுத்திர.

இந்திரனே, சூதுகாரனாகிய சுஷ்ணனை † நீர் சூதுகளால் வென்றீர், அறிஞர்கள் அப்பேர்ப்பட்ட உம்முடைய (பெருமையை) அறிகிறார்கள். அவர்களுடைய அன்னத்தை விர்த்தியாக்கும்.

௮. இந்த்ரமீஶாநமோஜஸாபி ஸ்தோமா அநூஷத, ஸஹஸ்ரம் யஸ்ய ராதய உத வா ஸந்தி பூயஸீ꞉.

எவர்களுடைய கொடைகள் ஆயிரத்தொகையானவைகளும், அதற்குமதிகமானவைகளுமாய் இருக்கின்றனவோ அ

* வலன் என்னும்பெயருடைய யாதொரு அசுரன் தேவர்களுடையபசுக்களை அபகரித்து ஒருகுகையில் ஒளித்துவைத்தபோது இந்திரன் அந்தக்குகையைத் தன்ஸைனியங்களால் சூழ்ந்துகொண்டு அப்பசுக்களை வெளியிற்கொண்டுவந்தார். இந்தஉபாக்கியானம் ஒரு பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

* மூலத்தில் ஸிந்து இதற்கு உரையில் "சொரிகின்றதாகிய ஸோமம் வழங்குகிற இந்தயாகத்தில் உம்முடைய கொடைமுதலிய குணங்களை" என்று விதித்துப் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது.

† 'சுஷ்ணன்' என்பது ஒரு அசுரனுடைய பேரென்று உரையில் கூறியிருக்கிறது. இப்பெயரின்பொருள் "சோஷிக்கிறவன்" அதாவது வரட்சியுண்டுபண்ணுகிறவன் என்பதாம்.

ப்பேர்ப்பட்ட, பலத்தினால் ஆள்பவராகிய இந்திரனை (ருத்துவிக்குகளாகிய) புகழ்வோர் ஸ்துதிக்கிறார்கள்.

௪-வது அநுவாகம்

ஸூக்தம். (௧.) (௧௨)

[இதற்கு ருஷி கண்வருடைய புத்திரரான மேதாதிதியென்பவர், தேவதைஅக்னி, பா காயத்திரி.]

வர்க்கம், ௨௨.

௧. அக்நிம் தூதம் வ்ருணீமஹே ஹோதாரம் விஶ்வவேதஸம், அஸ்ய யஜ்ஞஸ்ய ஸுக்ரதும்.

(தேவர்களுக்குத்)தூதனும், (தேவர்களைக்) கூப்பிடுகிறவரும், எல்லாப்பொருளுடையவரும், இந்தயக்கியத்தை நிறைவேற்றுகிற * வருமாகியஅக்கினியை (நாம்) அடைகிறோம்.

௨. அக்நிமக்நிம் ஹவீமபி꞉ ஸதா ஹவந்த விஶ்பதிம், ஹவ்யவாஹம் புருப்ரியம்.

பிரசைகளைக்காப்ப வரும், ஹவிஸை (தேவதைகளிடம்) கொண்டுபோகிறவரும், அநேகருக்கினியவருமாகியஅக்கினியை, † (அனுஷ்டித்தார்கள்) மந்திரங்களால் ‡ எப்போதும் கூப்பிடுகிறார்கள்.

௩. அக்நே தேவாம் இஹாவஹ ஜஜ்ஞாநோ வ்ருக்தபர்ஹிஷே, அஸி ஹோதா ந ஈட்ய꞉.

அக்கினியே, (அரணியினின்று)பிறந்திருக்கிறவராகிய (நீர்)வெட்டின தர்ப்பையைவைத்திருக்கிறவ(னாகியயசமான)னிடத்திற்கு, இங்கே, தேவர்களை(அழைத்துக்)கொண்டுவாரும் எங்கள்பொருட்டு (அவர்களை) அழைக்கிறவராகிய நீர்புகழத்தக்க வராயிருக்கிறீர்.

௪. தாம் உஶதோ விபோதய யதக்நே யாஸி தூத்யம், தேவைரா ஸத்ஸி பர்ஹிஷி.

அக்கினியே, (ஹவிஸை)விரும்புகிறவர்களாகிய அவர்களைநன்றாய்ப் போதியும்; ஏனெனில் (நீர்) தூதத் தொழிலை யடைந்திருக்கிறீர். (இந்தக்கருமத்தினிடத்து * தேவர்களோடு (வந்து)உட்காரும்.

௫. க்ருதாஹவந தீதிவ꞉ ப்ரதி ஷ்ம ரிஷதோ தஹ, அக்நே த்வம் ரக்ஷஸ்விந꞉.

நெய்யினால் அழைக்கப் படுகிறவரும், பிரகாசிக்கிறவருமாகிய அக்கினியே, ராக்ஷஸர்களோடுகூடிய, நமக்கெதிர்பக்கத்தாரனை ஹிம்சகர்களைப் பொசுக்கிவிடும்.

௬. அக்நிநாக்நி꞉ ஸமித்யதே கவிர்க்ருஹபதிர்யுவா, ஹவ்யவாட் ஜுஹ்வாஸ்ய꞉.

மேதாவியும், (யசமானனுடைய)வீட்டைக் காக்கிறவரும், (நித்திய)யௌவனம் பொருந்தியவரும், ஹவிஸை கொண்டுபோகிறவரும் ஜுஹூ†வை வாயாக உடையவருமான அக்கினியானவர் அக்

---

* அஸ்ய யஜ்ஞஸ்ய ஸுக்ரதும்=இந்தயக்கியத்துக்கு, நற்செய்கையினனை.

† மூலத்தில் அக்கினியை எனனும்சொல் இரட்டித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்கினியானவர் ஒருவரா யிருந்தபோதிலும், ஆகவநீயம் முதலிய இடவேற்றுமையாலும் "பாவகன்" (சுத்திசெய்பவன்) என்பதைப் போன்ற விசேஷண பேதங்களாலும் பலரூபங்கொண்டிருக்கின்றமையால் அப்பன்மையை குறிக்கும்பொருட்டு அக்கினியென்பது இரட்டித்துவந்ததென்றுஉரையாசிரியர்சொல்லுகிறார்.

‡ மூலத்தில் ஹவீமபி꞉=அழைப்புகளால் அல்லது அழைப்புக்கருவிகளால்.

* மூலத்தில் பர்ஹிஷி இதற்கு "தர்ப்பையின்மீது" என்று சகசமாய் அர்த்தமாகும்.

† ஜுஹூ என்பது ஹோமத்தில் நெய்யையெடுத்துவிடுகிற ஒருவிதக்கரண்டி.

கினியினால் * மூட்டப்படுகிறார்.

வர்க்க, ௨௩.

௭. கவிமக்நிமுபஸ்துஹி ஸத்யதர்மாணமத்வரே, தேவமமீவசாதநம்.

(ஓய் புகழ்வோர்களே) மேதாவியும், சத்தியமாகிய தருமம்பொருந்தியவரும், ஒளிசெய்கிறவரும், நோய்களைநீக்குகிறவருமாகிய அக்கினியை யக்கியத்தில்நெருங்கிப்புகழும்.

௮. யஸ்த்வாமக்நே ஹவிஷ்பதிர்தூதம் தேவ ஸபர்யதி, தஸ்ய ஸ்ம ப்ராவிதா பவ.

ஓ அக்கினியே, கடவுளே, (தேவ)தூதராகிய உம்மை எந்த யசமானன் † பூசிக்கிறானோ அவனுக்கு (நீர்)உருதியாய் ரக்ஷகராகும்.

௯. யோ அக்நிம் தேவவீதயே ஹவிஷ்மாம் ஆவிவாஸதி, தஸ்மை பாவக ம்ருடய.

ஓபகவானே, ஹவிஸுடையவனை எவன் ‡ தேவர்களுடைய உணவின்பொருட்டு§ அக்கினியை நெருங்குகிறானோ அவனைச் சுகப்படுத்தும்.

௰. ஸ நঃ பாவக தீதிவோ(அ)க்நே தேவாம் இஹா வஹ, உப யஜ்ஞம் ஹவிஶ்ச நঃ.

சுத்தமாக்குகிறவரும், பிரகாசிக்கிறவருமாகிய அக்கினியே, அப்படிப் பட்ட நீர் எங்கள்பொருட்டுத் தேவர்களை இங்கே (அழைத்துக்)கொண்டுவாரும், எங்களுடைய யக்கியத்தையும் ஹவிஸையும் (அவர்கள்)சமீபம் (சேர்ப்பியும்.)

௧௧. ஸ நঃ ஸ்தவாந ஆ பர காயத்ரேண நவீயஸா, ரயிம் வீரவதீமிஷம்.

புதிதான காயித்திரியாகிய பாவினால் ஸ்துதிக்கப் படாநின்ற அப்பேர்பட்ட நீர், எங்களுக்கு பொருளையும் (மக்கள், சேவகர்முதலிய) வீரர்களோடு கூடியஅன்னத்தையும் கொண்டுவாரும்.

௧௨. அக்நே ஶுக்ரேண ஶோசிஷா விஶ்வாபிர்தேவஹூதிபிঃ, இமம் ஸ்தோமம் ஜுஷஸ்வ நঃ.

வெண்மையானதேஜஸும், எல்லா மந்திரங்களு * ம் (கூடியவராகிய) அக்கினியே, எங்களுடைய இந்த ஸ்தோத்திரத்தை யேற்றுக் கொள்ளும்.

* ஆகவனீயம் என்னும் இடத்தின்அக்கினியானது வேறு அக்கினியினால் மூட்டப்படுகின்றதென உரை.

† மூலத்தில் ஹவிஷ்பதிঃ=ஹவிஸைக்காக்கிறவன் அல்லது உடையவன்.

‡ யஜமானன்

§ யாகத்தின்பொருட்டு.

* மூலத்தில்தேவஹூதி=தேவர்களையழைத்தல்.

பகவத்கீதை

௧௧ வது - அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

௨௩. ஓ தோள் வன்மையுடையவனே! அனேகமுகங்களையும், நேத்திரங்களையும், அனேகமான புஜங்களையும், தொடைகளையும், பாதங்களையும், வயிறுகளையும், உடைத்தாய் அனேகமான கோரைப் பற்களால் பயங்கரமானவும், மஹத்தானவும், உன்னுடையஆகாரத்தைப் பார்த்து, பிராணிகள் பயப்படுகின்றனர்.

௨௪. ஓய் கிருஷ்ணனே! ஆகாசத்தையளாவியும், எரிகின்றவும், பலவிதவர்னங்களையுடையவும், வெளிப்படும் முகங்களுள்ளவும், பிரகாசிக்காநின்ற நீண்டகண்களுடையவும், உன்னைப்பார்த்து பயப்பிட்டமனதையுடையவனாகிய நான் தைரியத்தையும், சமத்தையும் அடையாமல் இருக்கின்றேன்.

௨௫, கோரைப் பற்களால் பயங்கரமானவும், பிரளயாக்னி சமானமானவும், உன்னுடையமுகங்களைப் பார்த்து திக்குகளைத் தெரியாமல் இருக்கின்றேன்; சுகத்தையடையாமல் இருக்கின்றேன்; ஜகத்துக்காதாரமாகிய ஓ தேவதேவனே பிரசன்னனாவாய்.

௨௬. அரசர் கூட்டத்துடன் இந்தசமஸ்த திருதராஷ்டிர புத்திரர்களும், பீஷ்மனும், திரோணனும், அவ்வாறே சூதபுத்திரனாகிய கர்ணனும், என்சம்மந்தமான யுத்தத்துக்கு முக்கியமானவர்களோடும், உன்னை(பிரவேசிக்கிறார்கள்.)

௨௭. இவர்கள் துவரிதமாக கோறைப்பற்களால் விகாரமானவும் உன்னுடைய முகங்களில் பிரவேகிக்கிருர்கள். (அவர்களில்) சிலர்பற்களுடைய சந்துகளில் அகப்பட்டவராகி நுறுக்கப்பட்ட சிரஸ்ஸுகளோடும் காணப்படுகின்றனர்.

௨௮. எவ்வாறு அனேகமான நதிகளுடைய ஜலப்பிரவாகம் (சமுத்திரத்தை)நோக்கிச் சென்று சமுத்திரத்தை அடைகின்றனவோ அவ்வாறே இச்சூரர்கள் எங்கும்பிரகாசிக்கின்ற வுன்னுடையமுகத்தில் பிரவேசிக்கின்றனர்.

௨௯. விளக்குப்பூச்சிகள் நசிக்கும்பொருட்டு அதிகவேகமுள்ளனவாய் எரியாநின்ற அக்கினியை எவ்வா றடைகின்றனவோ, அவ்வாறேபிராணிகள் நாசமடையும் பொருட்டு உன்முகங்களில் பிரவேசிக்கின்றனர்.

௩௦. பிரகாசிக்கின்ற முகங்களாலே சகலலோகங்களையும் விழுங்கி எவ்விடத்தும் ஆஸ்வாதிக்கின்றனை, ஓ - பகவானே ! உன்னுடைய பயங்கரமான ஒளியின் சுவாலையினாலே சமஸ்தமான ஜகத்தில்நிறைந்து தபிக்கச்செய்கின்றது.

௩௧. ஓ தேவசிரேஷ்டனே ! உன்பொருட்டு நமஸ்காரம் ஆகட்டும் - என்பொருட்டு பிரசன்னமாவாய். நான்உன்னுடைய வியாபாரத்தை யறியமாட்டேன், ஆதலால் பயங்கரரூபமுடைய நீர் யார் ? நான்அதிபதி யாகியஉன்னை அறியவிரும்புகிறேன். என்பொருட்டுச் சொல்லுவாய்.

கிருஷ்ணன்சொல்.

௩௨. லோகத்தை அழிக்காநின்ற பிரபலமானகாலம் நான்ஆகின்றேன். உலகங்களையழிக்கும் பொருட்டு இப்பொழுது பிரவர்த்தித்தவனுகின்றேன். ஒவ்வொரு சேனையிலும் யுத்தம் செய்வராக யாவர்இருக்கின்றனரோ அவர்கள் எல்லாரும் உன்னைத்தவிற பிழைக்கிறதில்லை.

௩௩. ஆதலால் நீ(யுத்தத்திற்கு) எழுந்திரு, சத்துருக்களை ஜயித்து கீர்தியடைவாய். நிஷ்கண்டகமான ராஜியத்தை அனுபவிப்பாய். இவர்கள் முன்னமே என்னுல் கொல்லப்பட்டார்கள். ஓஅர்ஜுனு ! நீநிமித்தமாத்திரத்துக்கிரு.

௩௪. என்னுல் கொல்லப்பட்ட துரோணனையும், பீஷ்மனையும், ஜயதாதனையும் கர்ணனையும் அவ்வாறே யிதரமான யுத்தவீரர்களையும், மற்றவீரர்கள் யாவரையும் நிஜயிப்பாய், பயப்படவேண்டாம், யுத்தம் செய்வாய், யுத்தத்தில் சத்துருக்களைஜயிக்கக்கடவாய்.

சஞ்சயன்சொல்.

௩௫. நடுங்காநின்ற அர்ஜுனன் இந்தகிருஷ்ணனுடைய வார்த்தையைக் கேட்டு வணங்கி முகுளித ஹஸ்தனுய் மீண்டும் மீண்டும் பயப்பட்டவனுய் கிருஷ்ணனைநோக்கி மருபடி சேவித்து நத்தளிக்காநின்ற வாக்குடையவனுய் சொல்லுகிருன்.

௩௬. ஓ கிருஷ்ணு ! ஜகத்து உன் பிரபாவத்தால் சந்தோஷமடைந்து அநுராகங்கொள்ளுகின்றது. ராக்ஷசர்கள் பயப்பட்டவராய்திக்குகளைநோக்கி ஓடுகின்றனர். சித்த சமூகங்கள் வணங்குகின்றன. இது யுக்தம்.

௩௭. ஓய் மஹாத்மா ! உத்தம ளுனவும் பிரம்மதேவனுக்கும் ஆதிகாரணமானவும் உன்பொருட்டு ஏன் நமஸ்கரிக் காமலிருப்பார்கள். அந்தரஹிதனும்தேவதேவனும் ஜகத்துக்கு ஆதாரபூதனுமாகிய ஓஸ்வாமி அழிவற்றதும் இருக்கிறதென்று சொல்லப் படுகின்றதும் இல்லையெனப் படுவதும் இதற்குப்பரமானதும் (எல்லாம்)நீயே.

௩௮. ஓய்எண்ணிரந்தரூபமுடையவனே நீ ஆதிதேவன். புராணபுருஷன். நிஜகத்துக்கு உத்தமமான ஆதாரபூதன். அறிந்தவனும் ஆனுய் அறியத்தக்க பரமபதமும் நீயே. உன்னுல்பிரபஞ்சம் வியாபிக்கப்பட்டது.

௩௯. வாயுவும்,எமனும், அக்னியும், வருணனும், சந்திரனும், பிரஜாபதியும், அவனுக்குத் தகப்பனென்றுசொல்லப்படும். எல்லாம்நீயே(என்ருல்.)உன்னைவிட வேறுதெய்வங்களில்லை. உன்பொருட்டு ஆயிரந்தடவை வணங்குகிறேன் மறுபடியும் நமஸ்காரம், நமஸ்காரம்

௪௦. ஓய் சர்வமே! முன்னும் அப்புரமும், பின்னும், எல்லாதிக்குகளிலும் உன்பொருட்டு நமஸ்காரமாகக்கடவது. அமிதமான சாமார்த்தியமும்வல்லமையுடையநீசர்வத்திர சம்பூர்ணமாக வியாபித்திருக்கின்ருய். ஆதலின் சர்வஸ்வரூபனும் ஆகின்றனை.

௪௧. உன்னுடைய இந்தவிஸ்வரூபத்தையும், மகிமையையும், அறியாதஎன்னுல் அக்கியானத்தினுலாவது பரிசேயத்தினுலாவதுசிநேகிதனென்று எண்ணி ஓ, கிருஷ்ணு! ஓ,யாதவா ! ஓ, சிநேகிதா! என்று பேசப்படாத எந்தவசனம் பேசப்பட்டதோ (அதை க்ஷமிப்பாய்)

௪௨. ஓய் அச்சுதனே ! பரிஹாசத்தின் பொருட்டு உச்சாஹத்திலாவது, சயனகால

த்திலாவது, ஆசனகாலத்திலாவது, போஜன
காலத்திலாவது, ரகசியமாயாவது இவர்கள்
முன்பாகவாவது திரஸ்கரித்ததேதுஉண்டோ
அந்த அபராதத்தின் பொருட்டு பிரமாண
த்திற்கு கோசரமாகாத உன்னை நான் க்ஷமி
க்கும்படிக்கு மன்றாடுகிறேன்.

௪௩. ஒப்பற்ற பிரபாவமுடைய ஓய்ஸ்
வாமீ நீசரா அசரங்களாகிய இந்த லோகத்
துக்குத் தகப்பன், பூஜிக்கப்படத்தக்கவன்
உத்தமனானகுருவும் ஆகின்றனை. (ஆகையா
ல்)மூன்றுலோகங்களிலும் உனக்குச்சமான
மில்லைஉனக்கும்அதிகமான அன்னியன்யார்.

௪௪. ஆதலால் சரீரத்தைத்தாழ்ப்படுத்தி
வணங்கி நியாமகனும் பூஜிக்கத்தக்கவனும்
ஆகிய நின்னைப்பிரசன்னமாகக் கொண்டன
ன் ஓகடவுளே! புத்திரனைத்தகப்பனும்சிநே
ஹிதனை சிநேஹிதனும்,நாயகியை நாயகனும்
க்ஷமிப்பதுபோல் என்னுடையஅபராதத்தை
நீக்ஷமிப்பத்தக்கது.

௪௫. ஓதேவனே! எப்பொழுதும் பார்க்
கப்படாத விஸ்வரூபத்தைப்பார்த்துசந்தோ
ஷிக்கிறவனாகின்றேன், உன்னுடைய மனது
பயத்தினாலே மிகவும் சலிக்கப்படுகின்றது.
அந்த(பூர்வ)ரூபத்தைத்தானே என்பொருட்
டுக்காட்டுவாய். ஓதேவதேவஜகத்துக்காதா
ரமானவனே எனக்குப் பிரசன்னமாவாய்.

௪௬. ஆயிரம் புஜங்களையுடைய, ஓய்விஸ்
வரூபனே உன்னை கிரீடமுடையவனாகவும்,
அவ்வாறே கதையுடையவனாகவும். ஹஸ்தத்
தில் சக்ரமுடையவனாகவும், பார்க்கவிரும்பு
கிறேன். ஆதலால் நான்கு புஜங்களையுடைய
அந்தரூபத்தோடும் கூடினவனாவாய்.

கிருஷ்ணன்சொல்.

௪௭. ஓய் அர்ஜுனா! என்னுடைய தே
ஜோமயமானவும், அனந்தமானவும், ஆதியா
னவும், உன்னைவிட இதரர்களால் பூர்வத்தி
ல் பார்க்கப்படாதவும். உத்தமமானவும் எந்
தரூபமோ(அப்படிப்பட்ட) இந்த விஸ்வரூப
ம் பிரசன்னமாகிய என்னால் ஆத்மயோகத்
தின் மூலமாக (என்றால் ஞானபூர்வகமாய்,)
உனக்குக்காட்டப்பட்டது. (என்றால் ஆத்ம
யோகிகள் இந்தஜகத்தெல்லாம் என்னுடை
ய மயமென்று அறிகின்றமையால், அவர்
கள்மாத்திரமே என்னுடையவிஸ்வரூபத்தை
த் தரிசித்தவர்களாகின்றனர்.)

௪௮. ஓய் குருவம்ச வீரனே! இந்த(விஸ்
வ)ரூபமுடைய நான்நரலோகத்தில் உன்னை
யன்றி இதரனால் வேதயக்கியாதிகளாலும்
தானங்களாலும் கிரியைகளாலும். உக்கிரத
பஸ்ஸினாலும் பார்க்கப்படத்தக்கவனன்று.

௪௯. இப்படிப்பட்ட பயங்கரமான என்
னுடைய இந்தரூபத்தைப்பார்த்து உனக்குப
யமும் அறியாமையும் வேண்டாம், நீபயத்
தைவிட்டு சந்துஷ்ட மனதுடையவனாய் மீ
ண்டும் என்னுடைய அந்தபூர்வரூபத்தையே
பார்ப்பாயாக்.

சஞ்சயன்சொல்

௫௦. இப்படி என்று வாசுதேவன் அர்ஜு
னனைநோக்கி (மேற்கண்டவாறு சொல்லி)
மறுபடியும் ஸ்வகியமான ரூபத்தைக் காட்
டினான். அந்த மஹாத்மா சாந்தசரீரியாகி,
பயப்பட்ட இவனை மறுபடியும்தேற்றினான்.

அர்ஜுனன்சொல்.

௫௧. ஓய் ஜநார்த்தனா! பிரசன்னமாகிய
மனுஷசம்மந்தமான உன்னுடைய இந்தரூப
த்தைப்பார்த்து இப்பொழுது சந்தோஷ ம
டைகின்றேன். சைதன்னியத்தைக் கூடின
வனும் ஸ்வபாவத்தை அடைந்தவனும்ஆகின்
றேன்.

கிருஷ்ணன்சொல்.

௫௨. என்னுடைய எந்தரூபத்தைப்பார்
த்தாயோ,காண்பதற்கருமையான இந்தரூப
த்தை தேவர்களும் எப்பொழுதும் பார்க்கவி
ரும்புவார்கள்.

௫௩. என்னைஎவ்வாறு பார்த்தவன் ஆனா
யோ இந்த விதமாகநான் வேதங்களிலும் த
பஸ்ஸினாலும் தானத்தினாலும் யக்கியத்தினா
லும் பார்க்கக்கூடாது.

௫௪. ஓய் பரந்தபா! இதரபற்றுவேறுப
ற்றுயில்லாத பக்தியினாலும் இந்தவிஸ்வரூப
ந் தரித்தநான் ஞானமூலமாக அறியப்பட
வும், பார்க்கப்படவும், மோக்ஷம் அடையும்
பொருட்டும், சக்கியமானவனாகின்றேன்-எ
ன்றால் சத்தியத்தை உள்ளபடியறிந்த ஞா
னவான்கள்மாத்திரமே விஸ்வரூபியாகிய பி
ரம்ஹத்தைஅறிந்து வேறு பற்றில்லாத பக்
தியினால் மோக்ஷமடையக்கூடும், மற்றவர்க
ளுக்கு இஃது சாத்தியமன்று.

௫௫. ஓய் பாண்டவனே! என்பொருட்
டு சத்கர்மம் செய்கிறவனும், என்னையே பர
மாகக் கொள்வோனும், என்பக்தனும். (தன்
பந்துபுத்ரமித்ர களத்ராதி)சங்கத்தை வர்ஜி
த்தவனும், (என்றால் சம்சாரத்தில்ப் பற்றில்
லாதவன்)சமஸ்தபூதங்களிடத்தும்துரோதம
ற்றவனும் (ஆகியபிரம்மஹக்கியானியாரோ)
அவன் (மாத்திரமே) என்னை அடைவான்.

முண்டகோபநிஷத்து.

மூன்றும்முண்டகம்.

(க-வது அத்தியாயம்.)

இரண்டுபக்ஷிகள் எப்போதும் இணைபிரியாமல் துணையாக ஒரேமரத்தில் வசிக்கின்றன. அவற்றிலொன்று அரச(ம்பழத்தை) யுண்டுகொண்டும், மற்றொன்று உண்ணாமலே பலபக்கங்களைப் பார்த்துகொண்டும் இருக்கின்றன. அதேமரத்தி லிருந்துகொண்டு, மோகத்திற்காளான புருஷன், முழுகி, சக்தியின்மையால் துக்கிக்கிறான்; மற்றொன்றாகிய மகிமையுள்ள ஈசனைச்சேர்ந்துபார்க்கும்போது, (அவன்) சோகத்தினின்றும் விடுபட்டவனாகிறான். எப்போது, சுவர்ண வர்னமாயும், ஈசனாயும் கர்த்தாவாயும், பிரும்மத்துவாரமாயுமுள்ள புருஷனைக்காண்கிறானோ அப்போது அவன் வித்துவானாகி பாவபுண்ணியங்களைத்துறந்து, மாசற்றவனாக சிரேஷ்டமான சாம்மியத்தைஅடைகிறான். இந்த பிராணனானது சகலபூதங்களாலும் விளங்குகிறது. இதையறியும்வித்துவான் வேறொன்றைக்குறித்துப் பேசுவதில்லை. அவன் லீலை ஆத்மாவில். அவன் இச்சைஆத்மாவில். பிரம்மக்கியானிகளுக்குள் அவன் சர்வசிரேஷ்டன். இந்த ஆத்மாவானது நிலையான சத்தியத்தாலும், தபஸாலும், நல்லறிவினாலும், பிரும்மசரியத்தாலும், அடையத்தக்கது. குற்றமற்றயதிகள் யாரைக்காண்கிறார்களோ அவன் (நமது) சரீரத்துக்குள் ஒளிபொருந்தியவனாகவும், பரிசுத்தனாகவுமிருக்கின்றான். மெய்யேவெல்லும் பொய்யல்ல. சத்தியத்தினாலே பரமபதத்துக்கு மார்க்கம் விஸ்தாரமாய் வெளியாகிறது. இதினாலேதான் சான்றோர் விருப்பங்களை யடைந்த வர்களாய் இந்தச்சத்தியத்துக்குரிய சர்வசிரேஷ்டமான பதவியை அடைகிறார்கள். அது (பிரும்மம்)பெரிதாயும், திவியமாயும்,மனதினாலும்மட்டிமுடியாத ரூபத்தையுடையதாயும், சூக்ஷ்மத்திலும் சூக்ஷ்மமாயும்,பலவிதமாய் விளங்குகிறது. இது (தியானமற்றவர்களுக்கு) வெகுதூரத்திலிருக்கினும், (தியானிப்பவருக்கு) தூரமற்றிருக்கிறது. (தியானமார்க்கத்தினால்) காண்போருக்கு இவ்விடத்திலேயே (ஹிருதய) குகையில் விளங்குகிறது. (இவன்)கண்களாலாவது, வாக்கினாலாவது, மற்ற இந்திரியங்களாலாவது, தபசினாலாவது, கர்மத்தினாலாவது கிரகிக்கப் படமாட்டான். அவனருளிய ஞானத்தின் சஹாயத்தினால் சித்தசுத்தியுடையவன் தியானம்செய்துகொண்டுவந்து, அந்தநிஷ்களமான(பிரும்மத்தை யறிகிறான்.) இப்பரமாத்மா அனுவைப்போல் வெகுசிறியவனாயும், மனதினால் அறியத்தக்கவனாயு(மிருக்கிறான்).இதில்பிராணன் ஐந்துவிதமாய்ப் பிரவேசித்திருக்கிறது. பிரஜைகளின் சித்தங்களெல்லாம் பிராணன்களால் செய்யப்பட்டிருக்கிறது. அதுசுத்தமானால் கடவுள் பலவிதமாய் விளங்குகிறார். பரிசுத்தசுபாவமுடையவன் கோரும் உலகங்களையும் விருப்பங்களையும் அடைகிறான். ஆசையால் செல்வத்தைவிரும்புவோன் ஆத்துமக்கியனைப் பூஜிப்பானாக.

மநுநூல்

இரண்டாவதத்தியாயம்(தொடர்ச்சி.)

ருச. அவசியசமானவரை பிக்ஷைசெய்துகொண்டு, அதைக்கபடமின்றி குருவுக்கு நிவேதனம்செய்துவிட்டு கிழக்குமுகமாய்ப் பரிசுத்தமாய்ஆசமனம்செய்துவிட்டு (பிரும்மசாரி) அதைஉண்ணக் கடவான்.

ருஉ. நீண்டவாழ்வைக் (கோருவோன்)கிழக்குமுகமாயும், கீர்த்தியைக் (கோருவோன்)தெற்குமுகமாயும்செல்வத்தை(க்கோருவோன்) மேற்குமுகமாயும், சத்தியத்தைக்(கோருவோன்) வடக்குமுகமாயும், உண்ணக்கடவான்.

ருங. த்விஜன்தினந்தோறும் ஆசமனஞ்செய்து நிச்சலசித்தனாய் போஜனஞ்செய்த பின்பும், சாஸ்திரவிதிப்படி, கண் காதுமுதலிய இந்திரியங்களையும் தொடக்கடவன் (ஆசமனஞ்செய்யக்கடவன்.)

ருசு. தினந்தோறும் அன்னத்தைபூஜிக்கக்கடவன், அதைநிந்திக்காமல் உண்ணக்கடவன்; அதைக்கண்டு சந்தோஷிக்கக்கடவன்; துதிக்கக்கடவன் நித்தியம் நமக்குஇதுஉண்டாகவேண்டுமென்றும்; பிரணமஞ்செய்யக்கடவன்.

ருரு. தினந்தோறும் பூஜிக்கப்பட்ட அன்னமானது சாமர்த்தியத்தையும் வீரியத்தையும்கொடுக்கிறது. பூஜிக்கப்படாத, அன்னமானது இவ்விரண்டையு நாசஞ்செய்யும்.

ருகூ. உண்ணவெச்சிலே ஒருவனுக்கும் கொடுக்கக்கடவனல்லன். இரண்டுகாலம் தவிர நடுவில் அடிக்கடி உண்ணக்கூடாது; பெருந்திண்டி உண்ணக்கடவனா

ல்லன். எச்சிலுடையவனுய்எவ்விடத்திற்கும் போகக்கடவனல்லன்.

ருஎ. பெருந்திண்டியானது, நோயை கொடுக்கிறதாயும், வாழ்கைக்குஅனுகூலமாகாததாயும்; புண்ணியத்தைக்கொடாததாயும், உலகநிந்தியமாயும், ஆகிறபடியால் அதைவிட்டுவிடக்கடவான்.

ருஅ, தினந்தோறும் பிராம்மணன்,பிரம்மதீர்த்தத்தினுல், ஆசமனஞ்செய்யக்கடவான். பிரஜாபதீர்த்தத்தினுலாவது,தெய்வதீர்த்தத்தினுலாவது, பிதுருதீர்த்தத்தினுலாவது எப்பொழுதும்ஆசமனஞ்செய்யக்கூடாது.

ருகூ. கட்டைவிரலி னடிப்பிரதேசத்தில்,பிரம்மதீர்த்தமென்றும், சுண்டுவிரலின் மூலதேசத்தில் பிரஜாபதி தீர்த்தமென்றும், விரல்களின் நுனியில் தெய்வதீர்த்தமென்றும்,கட்டைவிரலுக்கும்,(தர்ஜநீ) ஆள்காட்டி விரலுக்கும் மத்தியில் பித்ருதீர்த்தமென்றும் சொல்லப்படுகிறது.

கூ0. முதலில், மூன்றுதிரம் ஜலத்தைக்குடிக்கக்கடவன், பின்பு, இரண்டுதடவைவாயை ஜலத்தினுல் துடைக்கக்கடவன்; ஜலத்தினுல், கண்செவிமுதலிய, இந்திரியங்களேயும், ஹிருதய தேசத்தையும், சிரஸ்ஸையும் துடக்கடவன்.

கூக. தர்மமறிந்தவன்சுசியைவேண்டினவனுய்எப்பொழுதும் பிரம்மதீர்த்தத்துடன், நுரையில்லாக்குளிர்ந்த ஜலத்தினுல், விஜனதேசத்தில் கிழக்குமுகமுடையவனுக ஆசமனம், செய்யக்கடவன்.

கூஉ. பிராம்மணன், ஹிருதயத்தை, அடைந்த ஆசமன ஜலத்தினுலும், க்ஷத்திரியன், கழுத்துவரைக்கும் பிரவேசித்த ஜலத்தினுலும், வைசியன்,குடித்தஜலத்தினுலும் (வாயிக்குள்மாத்திரம் பிரவேசித்த) ஜலத்தினுலும், சூத்திரன், வாய் உதட்டு நாக்கிளவில் பட்டஜலத்தினுலும், பரிசுத்தனுகிருன்.

கூந. வலக்கைக் கோர்த்துவாங்கின உபவீதம் இடத்தோளில் இருக்கும்பொழுது, பிராம்மணன் (உபவீதி.) என்றும், இடக்கைக்கோர்த்து வலத்தோளிலிருக்கும்போது, பிராசினுவீதிஎன்றும்,கழுத்தில்தாவடமாய் தொங்கும்பொழுது நிவீதி, என்றும்சொல்லப்படுகிருன்.

கூச. கெட்டுப்போன, மவுஞ்சி கிருஷ்ணஜின தண்டு கமண்டலுக்களே ஜலத்தில் போட்டுவிட்டு வேறுகிருஷ்ணஜினுதிகளே மந்திர பூர்வகமாக கிரஹிக்கக்கடவன்.

கூரு. கேசபிந்தமென்னும் ஒருஸம்ஸ்காரமானது, பிராம்மணனுக்கு, கசு-வயதிலும், க்ஷத்திரியனுக்கு, உஉ-வயதிலும் வைசியனுக்கு, உச-வயதிலும், விதிக்கப்படுகிறது.

கூசு. ஜாதகர்மாதிஎல்லாகிரியைகளும் அமந்தரகமாய் விதித்தகாலத்தில் கிரமப்படி ஸ்திரீகளுக்கும் சரீரசுத்திக்காக செய்யத்தக்கது.

கூஎ. விவாஹவிதியே ஸ்திரீகளுக்கு உபநயன வைதிகமாயும்,அவர்களுக்கு பதிசிசுருஷையே குருகுலவாஸமாயும், கிரககிருத்தியமே,ஔபாஸநாதி அக்கினிகிரியையாகவும், சொல்லப்படுகிறது.

கூஅ. த்விஜாதிகளுக்கு, இதுவே, புண்ணியமாயும், இருபிறப்பு முவியஞ்சகமுமான, உபநயநத்தைச் சேர்ந்தகர்மமென்று சொல்லப்படுகிறது. இனிஉபநீதனுடையகர்மயோகத்தை கேளுங்கள்.

கூகூ. குருவானவர், சிஷியனுக்கு உபநயனஞ் செய்வித்து முதலில் பிரக்ஷாளந சவுசத்தையும், ஸ்நாநுதி ஆசாரத்தையும்பிராதஸ்ஸமித ஹோமானுஷ்டானத்தையும் ; சந்தியாவந்தனவிதியையும்கற்பிக்கக்கடவன்.

எ0. அத்தியயனம் பண்ணப்போகிறவன், சாஸ்திரப்படி, ஆசமனம் செய்தவனுகிலும், வடக்குமுகநாயும் பிரம்மா அஞ்சலிசெய்தவனுயும், பிரிசுத்த வஸ்திரமுடையவனுயும் ஜிதேந்திரனுயுமிருக்கும், சிஷியன் அத்தியயனம் செய்விக்கத்தகுந்தவன்.

எக. எப்போதும் வேதாத்தியயனத்தின் ஆறம்பத்திலும், முடிவிலும், குருவின்பாதங்களேக் கிரகிக்கவேண்டும். கைகளேக்கூப்பிக்கொண்டு அத்தியயனஞ்செய்யத் தக்கது, இது பிரம்மாஞ்சலியென்று ஸ்மரிக்கப்படுகிறது.

(தொடர்ந்துவரும்.)

நிருபம்.

ம-ா-ா- தத்துவபோதினி கர்த்தரவர்கள்சமுகத்திற்கு.

தங்களால் பிரசுரம் செய்யப்பட்டு வருகிற தத்துவபோதினி யென்கிறபத்திரிகையினேர்பிரதிமாத :மாதமென்பார்வைக்குக் கிடைத்துவருகிறது.

அதினாலெனது நடவடிக்கைகள் சீர்திருந்தலாய்க் கொண்டுவருகிற விஷயங்கள்சாக்ஷியங்களாக விருக்கின்றன.

ஆகையால் இப்பத்திரிகையில் அடங்கிய விஷயங்கட்குத் தங்கள்பத்திரிகையி லிடங்கொடுக்கவும் அவ்விஷயங்களிலுள்ள குறைவுகளைப்பற்றி என்னைக்கண்டிக்கும் பொருட்டுத் தங்கள் அபிப்பிராயத்தைத் தங்கள் பத்திரிகையிற் குறிக்கவும் வேண்டுமென்பது எனது அபீஷ்டமாகையால் அற்பமனிதனாகிய என்மீது அறிவிற்சிறந்த கனவான்களாகிய தாங்கள் அன்புகூர்ந்து எனதுகோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று விநயத்துடன் பிரார்த்திக்கிறேன்.

ஜீவகோடிகளுக்குள் மானிடஜன்மம் துர்லபமென்கிற வாக்கியமொன்று வழங்கிவருகிறதல்லவா ? அவ்வாக்கியத்திற்கு எனது சிற்றறிவைக் கொண்டு பொருள் செய்யுமிடத்துத் துன்பங்களிலிருந்து விடுபடுவதற் காஸ்பத மில்லாமல் நெடுங்காலம் வருத்தப்படஹேதுவாயுள்ள ஸ்திரமில்லாத அற்பவிஷயங்களில் புத்தி பிரவேசமாக வொட்டாமல் தடுப்பதற்கும் சுவரூபஞானத்தை யறிகிறதற்கும் கிடைத்த நல்லசமயமென்பதைவிட வேறொன்றும் தோற்றவில்லை.

இப்படிக்கு அவகாசமுள்ள ஸ்தூல சம்மபந்தங் கிடைத்திருந்தாலும் இச்சம்பந்தத்தின் முடிவு கைவசமில்லாத தாயிருப்பதினாலே உண்மை ஞானத்தை விளக்கிக்கொள்ள நிமிஷமாவது ஆலசியப்படுத்தக் கூடாதென்பது அநுபவ சித்தாந்தமாயிருக்கிறது.

ஆகையால் வெகுகால தபசால் அரிதாகக்கிடைத்த கனமானகாலங்களை வீணாகப் போக்க வுடன்படுகிற பேதைகளுடையவும் உலகசம்பந்தமான விஷயாதிகளிலேயே மனதைச் செலுத்தி அன்றாடகம் நடவடிக்கைகளை நடத்தத்துணிந்து ஆநந்தமென்றநுபவிக்கிற அவஸ்தாத்ரயங்களினால்கடத்தேறமார்க்கமுண்டென்று நம்பியும் தத்துவஞானமானது சம்பாஷிப்பதற்கு மாத்திரமே யல்லாமல் அநுபவத்துக்குதவா தென்றெண்ணியும்பிசகிப் போகிறகூட்டத் தாருடையவும், சேர்க்கையினின்றுவிலகிதான் ஆலோசித்ததில்எனக் குண்டாயிருக்கும்மான அபிப்பிராயங்களாவன.

ஜாக்ரஸ்வப்நஸுஷுப்தி துரியமென்கிற நான்குவகுப்புகளிலும் அததற்குத் தக்கபடி தேகசம்மந்த மிருக்கிறதேயல்லாமல்நிர்மலமாயிருக்கவில்லை.

இந்நான்கு வகுப்புகளிலும் அவஸ்தைகள் சுகம்போல் தோற்றுதலே யல்லாமல்சாசுவதமானபிரயொஜனத்துக்காஸ்பதமில்லை.

இந்த நான்கில் ஒவ்வொரு அவஸ்தையும் அநுபவத்துக்கு வருங்கால் மற்ற அவஸ்தைகளின் பிரயோஜனங்கள் அபத்தமென்கிறநிச்சயத்தை அந்தந்த அவஸ்தாகாலங்களில் கொடுத்துக் கொண்டே வருவது யாவர்க்கும் சுவாநுபவமாயிருக்க வுலக நடவடிக்கைகள் விஷயத்தில் ஜனங்களுக்கு அபிமானம் மாறாமலிருப்பது அருமையாயிருக்கிறது.

மகத்துக்களென்று பெயர் பெறவேண்டுமென்கிற ஆவலும் துரியாநுஷ்டானப்பிரியமுள்ள யாவரும் துரியாவஸ்தையை யநுபவிக்குங்கால் பிண்டாண்டமே விராட்ஸ்வரூபமாய்த் தோற்றி, ஞானதிருஷ்டியால் அறிந்தேனென்று வெளியிடும் விஷயங்களைப்பற்றி அவர்கட்கு விசேஷத்துவம் உண்டென்று நம்பக்கூடாமையா யிருக்கிறது.

வாஸ்தமென்று கொண்டாடும்படியாக பஹிரங்க திருஷ்டிக்குத் தோற்றப்படுகிற வுலகநடவடிக்கைகளை நம்புகிறபக்ஷத்தில்மாத்திரம், சுகத்துக்காவஸ்தைகளினால் பாதிக்கப்பட வேண்டி நேரிடுகிறதென்பதும் பலவிதமாய் பேதங்கள் தோற்றுவதற் காஸ்பதமான சரீரசம்மந்த முண்டாயிருந்தாலும் விவேகமென்கிற ஆயுதமொன்று ஆதீனமாயிருப்பதினாலே பகுத்தறிந்து சரீராவஸ்தைகளைமறந்து ஸ்வரூபஞானத்தில் புத்தியைச் செலுத்தி அநுபவிக்கிற ஆநந்தத்திற்கு சதிருசமில்லையென்பதும் நான்என்கிற கொள்கைக்கும் சர்வசாட்சியாகிய ஞானக்கடலுக்கும் மத்தியில் அளவிடஎத்தனிக்குங்கால் அக்கொள்கை மித்தியையாய் பவிக்கிறதென்பதும் வாஸ்தவமாகவும்சர்வ்வியாபகராயிருக்கிற கடவுளாரிடநிலையை அறிகிறதற்குத்தத்துவவிசாரணை லகுவான கருவியாகவுமிருக்க நிச்சயங் கொள்ளாமல் கடவுளிருக்கிறவிடம் தெரியவில்லையே யென்று, அலப்பி, அலரி, முறையிட்டு வேண்டி மூடர்களால் வெளியிடப்படும் குருட்டுவழியிற் கூசாமற் பாய்ந்து காடுவனம் வனாந்தரம் பருவதமுதலாகிய ஸ்தலங்களில் ஓடியலைந்து ஒ

ய்ந்து தளர்ந்து ஊமைகண்ட கனவுபோல் உள்ளடக்கிக் கொண்டு மயங்கி இலவுகாத்த பட்சிபோல்இவ்வுலக நடவடிக்கைகளைநம்பிஅப்பிரயோஜகர்களாவதில் பலனில்லையே.

எனது யோசனையில் தெளிவுற நின்றதாவது தத்துவவிசாரணையினால் நிச்சயங்கொண்டு தேகசம்மந்தங்களை மறந்திருப்பதாகிய அதீதானுபவமேயாம்.

இவ்வுறுத்திப்பாட்டுக்கு தேகப்பிரயாசையும்உசிதமென்று உலகத்தாராலொப்புக் கொள்ளப்பட்டு நடந்தேறிவருகிற நடவடிக்கைளும்அனுபயோகமென்பது எனது மதம்குற்றங்களை மன்னிக்கக் கடவது.

௧௮௬௫ வரு ஆகஸ்டுமீ ௧௮வ கோயம்பத்தூர்ஜில்லாஉடுமலைப்பேட்டை.	இங்ஙனம். தத்துவத்தைநம்புவோன்.

ம - ள - ள - தத்துவபோதினி கர்த்தரவர்கட்கு.

சோதரர்களே! நம்ம தேசத்தாருக்கு நன்மையுண்டாகக் காரணமா யிருக்கிற தங்கள்பத்திரிகையில் இந்தச்சஞ்சிகையைப் பிரசுரப்படுத்த வேண்டுமென்று கோறுகிறேன்.

இம்மாதத்திய தங்கள் பத்திரிகையில், நலங்கோருவோன், என்று கையொப்பமிட்டகிருபமொன்று பிரகாசித்துக்கொண்டு வந்திருப்பதை அறிவிற்சிறந்த அநேகர்பார்த்துங் கேட்டும் அளவற்ற ஆநந்தத்தை யடைந்திருக்கிறார்கள்.

அங்கிருபத்திற்குறிக்கப்பட்டிருக்கிற முதலாவது, பாலுண்ணும் பெண்கட்கு, பொம்மைக்கலியாணம் நடத்தி, வருவது. இரண்டாவது - பெண்கட்கு புனர்விவாகஞ் செய்யாமை. இவ்விரண்டு விஷயங்களைப்பற்றிநான் பிரஸ்தாபிக்கிறேன்.

விவாகத்தின் கருத்தெல்லாங்கூடி ஸ்திரீ புருஷாளிருவரும், அந்நியோந்நியமாய் வாழ்ந்திருக்க உடன்பட்டுச் செய்துகொள்கிற வுடன்படிக்கைகளா யிருக்கின்றன.

இவ்வுடன்படிக்கைகள் மிகவும்உத்தரவதமுள்ள வைகளாகையால் இவைகளைச் செய்துகொள்வோர் அவைகளின்கருத்து இன்னதென்பதைத் தெரிந்துகொள்ளக் கூடுமான அவ்வளவுசக்தி யவர்கட்கு விவாககாலத்திலேயே யிருந்திருக்கவேண்டு மென்பது நியாயமாகவும் நீதிக்கொத்ததாகவும் யிருக்கிறதென்பது யாவர்க்குந் தோற்றலாம்.

இவ்விஷயத்தில் மகம்மதியனாவிட இங்கிலீஷ்க்காரர் மிகவும் எச்சரிக்கையாய் நடத்திவருவதினாலே வியசனஸாமஹ்யம் அவர்களை, பாதிக்கஹேதுவில்லையென்பது, தெரிந்தகாரியமாக விருக்கிறது.

பகுத்தறிவுள்ள, மானிடஜன்மங் கிடைத்திருந்தும் துக்கங்கட்காஸ்பதமாயுள்ள குறைவுகளைக் கண்டிக்க யத்தினப்படாமல் மனதொப்பி அவஸ்தைகளை, அநுபவிக்கத்துணிகிறவழக்கம் நம்மவர்கட்குள் மாத்திரமிருப்பதைக் கண்டறியாத வர்களார்?

மற்றவர்க ளொப்பந்தம் நம்மவர்களும் பெண்கட்குத்தகுந்த வயதும் விவேகமும்வந்தமேல் விவாகம்செய்ய ஏற்படுவாராகில் அத்தன்மையான விவாகத்தினால்அந்நியோந்நிய மடைகிற ஸ்திரீபுருஷர்கள் அடையத்தக்கதிருப்திக்களவுண்டா ?

பொம்மைக்கல்யாணத்தாலும் இந்தப்பிரயோஜனமுண்டென்று நம்புவதற் கில்லாம லிருக்கிறதல்லவா.

நம்மவர்களில் வெகுஜாதியார் பொம்மைக்கல்லியாணத்தில் பிரியமில்லாமல் ஸ்திரீகட்கு விவேகமுண்டானமேல் விவாகம் நடத்திவருவதைப்பார்த்தும் அங்கீகரித்து மிருக்கிறோமல்லவா.

இத்தன்மையான விவாகத்தின் பிரயோஜனமின்னதென்பதுசகலருக்கும்நிஜாநுபவமுள்ளதாகையாலிதைப் பற்றியதிகமாயெடுத்துரைப்பதில் பயனென்னை.

ஸ்திரீகட்கு புனர்விவாகங் கூடாதென்கிற, இரண்டாவது விஷயத்திலடங்கியிருக்கிற குறைவுகளையெடுத்துபேசுகிறேன்.

விவாகவுடன்படிக்கைகளை மாற்றஸ்திரீயல்லது புருஷருக்குக் கூடுமாவென்பதுயோசிக்கத்தக்கதாயிருப்பதில், தகுந்தகாரணமிருக்குமாகில் மாற்றக்கூடுமென்பது நீதிக்கடுத்ததாயிருக்கிறது. இந்தக்கிரமத்தையோசித்து இங்கிலீஷ்மஹம்மதியன் மதஸ்தர்களுக்குள் மட்டும் விவாக வுடன்படிக்கை களை மாற்றுகிற ஆசாரமும் நடந்தேறி வருகிறது.

இம்மதஸ்தர்களைப்பார்த்து நம்மவரிற்சில ஜாதியாரும் அதையனுஷ்டித்து வாழ்ந்துவருகிறார்கள். அதற்காக அவர்கள்மதமல்லது ஜாதிபிரஷ்டத்துவத்தை யடையாமல் நம் மதசம்பந்தமானபொதுநடவடிக்கைகளிற் சேர்த்துக்கொள்ளப்பட்டு வருகிறார்கள். விவாகவுடன்படிக்கைகளைக் கடந்துநடக்க பு

ருஷருக்குமட்டுங் கூடுமென்று ஒப்புக்கொண்டிருக்கிற நம்மவர்கள், ஒருவருக்கு அடிமைப்பட்டிருக்கும்படியான ஸ்திதியிலிருக்கிற ஸ்திரீகள்விஷயத்தில் அந்தசுதந்திரத்தைக் கொடுக்கமனமில்லாமலிருப்பது விசிதமா.

இங்ஙனங்கன் மனதாய் நடப்பித்து வருவதினால் விளைகிறதுன்பங்கள் அகணிதமல்லவா.

இவ்விஷயமாய் நம்மவரிற் சிலபிடிவாத சங்கத்தாரைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். தகுந்தகாரணமிருந்தாலும்விவாக உடன்படிக்கைகளை ஸ்திரீகள்மாற்றவேகூடாதென்பதும் அதினாலுண்டாகிற தீமைகளையநுபவிக்கவேண்டியது கடமையென்பதும்அவர்களிட வாதமாயிருக்கிறது. அதற்கவர்கள் சொல்லும் ஆதாரமோ மவுட்டியாசாரமே யிவ்வாசாரம் நிகிருஷ்ட மானதென்று அவர்கள் நினைப்பதும் அவ்வாசாரத்தைப்பற்றி விரோதகட்சிகளை யெடுத்துப்பேசுவதும் விவாகவுடன்படிக்கைகள் ஸ்திரீகள்விஷயத்திலும், மாற்றத்தக்கவைகள்தான் என்கிறஞானம் அவர்கட்குண்டாவதுமான சமயமுமுண்டென்று கேள்விப் படுகிறேன்.

அஃதாவது. எவனெவன்பிடிவாதியாயிருக்கிறானோ அவனுக்குமிகவும் அன்புள்ள பெண்ணின்விஷயமாய் அசந்தர்ப்பம்நேரிடுங்காலந்தான். அறிவுள்ளவர்கட்குஇந்தநிச்சயம் எப்பொழுது முண்டல்லவா.

உலகத்தாரனைவருஞ்சேர்ந்து அனுகூலங்களையோசித்துத் தீமைகளைவிலக்கிநன்மைகளையடைந்து மன்னுயிரை தன்னுயிராகபாவித்து வாழ்ந்திருக்கவேண்டுமென்பதுபொதுவிதியல்லவா. இவ்விஷயத்தில் இங்கிலீஷ்க்காரருக்கு இருக்குமான அபிமானமும் யத்தினங்களும் நம்மவர்கட்கில்லாமற் போனதற்காக விதனப்படவேண்டி யிருக்கிறது.

நம்மவர்களில் சிலஜாதியாருக்குள்மாத்திரம் நடந்தேறிவருகிற மேற்கண்ட விரண்டு கொடியகொடுமைகள் நிவர்த்தியாக தபசிருந்தோம். பிரகிருதத்தில் இவ்வுத்தேசமாய்த்தலைப்பட்டிருக்கிற கனம்பொருந்தியரங்கநாதசாஸ்திரியாரைக் கொண்டாடுகிறோம்.

அவரெடுத்த இக்காரியங்களைத் தவறவிடாமல் பாதுகார்த்து நிலைநிறுத்துவாரென்கிறவுறுதியுமுண்டாயிருக்கிறது. இக்காரியங்களின் உத்தேசமாய் ரங்கநாதசாஸ்திரியார் அனுசரிக்கும் மார்க்கத்தில், பழுதுகள்தோன்றுவதாய் நலங்கோருவோன், என்றுகையொப்பமிட்டவர் உரைத்திருக்கிறார், அதைப்பற்றி நான்பேசுகிறேன்,

இரங்கநாதசாஸ்திரியார் அநுசரித்திருக்கும்மார்க்கம் அங்கீகரிக்கப் படத்தக்கதே. ஏனெனில் பிரஸ்தாபத்திலிருக்கிற உத்தேசத்தைநிறைவேற்ற வொருசம்ஸ்கிருத பண்டிதரைக்கொண்டு அவர் செய்வித்திருக்கிற கிரந்தம் மூடாத்துமாக்களை நல்வழியில் திருப்புவதற்கேயன்றி ஞானவந்தாளுக்கல்ல.

இந்தக்கிரந்தத்திற்குக் கர்த்தா ரங்கநாதசாஸ்திரியாராயிருப்பாராகில் பலபாஷைகளில், அவருக்கு விசேஷபாண்டித்தியமிருப்பதினாலே அந்நியமதாபிப்பிராயங்களையும் எடுத்துரைக்கிறாரென்றே பேதைகள் நினைத்துப்பின்வாங்க ஹேதுவாய்நேரிடும். சம்ஸ்கிருதமட்டும் கற்ற பண்டிதரிடவாக்கியம் அவர்களுக்கங்கீகாரமுள்ள தாயிருக்கும். ரங்கநாதசாஸ்திரியாரால் ஏற்படுத்தப்பட்ட சம்ஸ்கிருதபண்டிதர் ஞானத்தில் தோஷரஹிதராகவே யிருப்பார். பிரஸ்தாபத்திலிருக்கிற கிரந்தத்திற்கு ரங்கநாதசாஸ்திரியாரிட பூர்ண்ண வுதவியும், சோதனையுமிருந்திருக்கலாம். ஏன் அப்படிநினைக்கக் கூடாதா அந்தக் கிரந்தத்துக்கு மற்றப் பாஷைகளில் மொழிபெயர்ப்புகள் ரங்கநாதசாஸ்திரியார் தாமேசெய்யாமல் அசட்டையாயிருக்கமாட்டார். அவைகளின்பிரதிகள் நம்மவர்களுக்கெல்லாம் எட்டவும்செய்விப்பார். பிரகிருதத்தில் ரங்கநாதசாஸ்திரியார் தாம்கைக்கொண்டிருக்கிற காரியங்களைமடாதிகாரிகளின் சகாயத்தால் சாதிக்கலாமென்று ஏன்நினைக்கக்கூடாது. மதசம்பந்தம் அல்லது குடும்பவிருத்தியைப்பற்றிய நடவடிக்கைகளிலுள்ள பழுதுகளை திருத்தவும், மாற்றவும், ஒழுங்கேர்ப்படுத்தவும் மடாதிபக்கு ஆதிக்கியமுண்டென்கிற நம்பிக்கையும், அவர்களிட கட்டளைகளைச் சிரசில்வகித்து அவைகட்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது கடமைதானென்கிறவுறுதியும் நம்மவர்களுக்குள் மாறவில்லையே. வெகுகாலமாய் ஆசரணையில்லாத நடவடிக்கைகளை ஜனோபகாரநிமித்தம் உபயோகத்திற்கொண்டுவருகிறதற்கு அநேகரிட அந்நியோந்நியத்தை யெதிர்பார்ப்பதுபோல மடாதிபதியின் சகாயத்தையும் ரங்கநாதசாஸ்திரியார் கோரலாம்.

மேற்படி விஷயங்களைப்பற்றிய யத்தினங்களைக்குறித்து இதனடியிற்காண்கிற என்னிட சிலவபிப்பிராயங்களை ரங்கநாதசாஸ்திரியார் யோசிக்கவேண்டுமென்பதுஎனதுகோரிக்கையாயிருக்கிறது.

இரண்டு விஷயங்களைப்பற்றிய பிரயத்தினங்கள் க்ஷிப்பிரத்தில் ஜாரியில் வரவேண்டியதும், அதற்காக முயற்சிசெய்யவேண்டியதும் சகஜமே.

இரண்டுயத்தினங்களையும் ஏககாலத்தில்பிரயோகப்படுத்துவதில் உத்தேசம் நிறைவேறுவது அசாத்தியமென்று நினைக்கிறேன். முதலாவதுவிஷயத்தைப்பற்றிமட்டும் முதலில் யத்தினப்படுவது, சாதுவாகவும், நிறைவேறக்கூடியதாகவும் தோற்றுகிறது. முதலில்விஷயங் கைக்கூடிவருங்கால் இரண்டாவது விஷயம் பிரயத்தினமன்றியில் நிறைவேற அநுகூலப்படுமாகையா லிதிலுள்ள குறைவுகளை மன்னிக்கவேண்டுகிறேன்.

கஅசூரு(ஞூ)
ஆகஸ்டுமீ ககூஉ
உடுமலப்பேட்டை.
கோயம்புத்தூர்ஜில்லா.

இங்ஙனம்.
சன்மார்க்கப்பிரியன்.

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

சென்னை, ம - சபாபதிமுதலியார்......	உ
கூடலூர், செல்லப்பிள்ளை பி - எல். ...	க
சிங்கவனம்பாளயப்பட்டு, செவ்வாய்விஜயரகுநாத மெயக்கங்கோபாலர்......	க
மதுக்கூர்பாளையப்பட்டுஜமீந்தார் சவ்வாய் விஜய ரகுநாதவாளோஜி கிருஷ்ணங் கோபாலர்......	க
பூவலூர்,மிராசு ஆவடைசேர்வைக்காரர்...	க

இராகம் - காம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

எல்லாம்வல்லபரப்பிரம்மம் - ஒன்றேதெய்வம்.

அநுபல்லவி.

சொல்லாலடங்காதவெளிமுதலியதோற்றம்
எல்லாம்படைத்தளித்தழிக்குந்தொழின்முதல்......(எல்லாம்)

சரணங்கள்.

க. கடந்தஞானிகளுள்ளக்கருத்தினிற்கண்டது
காணாதமானிடராராயவிண்டது
படர்ந்ததாமரைத்தண்ணீர்போன்மனப்
பற்றற்றவர்தொழப்பிரத்தியக்ஷங்கொண்டது......(எல்லாம்)

உ. ஆதிமறைக்குள்ளேயோதிப்பதித்தது
அணுவுக்கணுவாகி யங்கங்கேகதித்தது
ஜோதிமணிபோலத்தூயதன்மைத்தது
தொண்டர்களெல்லாருந்தொழுதுதுதித்தது.........(எல்லாம்)

ங. காரணகாரியமீரண்டு மேயது
கற்பனையுளத்திற்க்கு காணமற்போயது
பூரணமாயெங்கும் ஓங்கிப் பேர்போயது
பூதலத்தோருள்ளம் புகுந்துமெய்யாயது............(எல்லாம்)

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.